சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

OS.No./120/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜவேல் | வா.சா : | 1 |
| த/க/பெயர் : | முத்துசாமி | தொழில் : | கமிஷன் ஏஜெண்ட் |
| ஊர் : | திருச்செங்கோடு | தாலுக்கா : | |
| வயது : | 62 | நாள் : | 09-06-2023. |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இடம் வாங்கி விற்பது, வண்டி வாகனம் வாங்கி விற்பது போன்ற கமிஷன் வியாபாரம் 10 வருடங்களாக செய்து வருகிறேன். பைனானஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. ஆனால் சீனிவாசா பைனான்ஸ்க்கு வழக்கமாக செல்வேன். மற்ற பைனான்ஸக்கு செல்வது இல்லை. 2013ம் வருடம் அக்ரிமெண்ட் போட்டது சம்பந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மணியிடம் 2013ல் போட்ட அக்ரிமெண்ட்படி இந்த வழக்கு நடைபெறுகிறது. நாகராஜன் என்ற புரோக்கரிடம் வைத்து மேற்படி அக்ரிமெண்டை எழுதினேன். மேற்படி சொத்து 1760 சதுரடி உள்ள காலி மனை ஆகும். மணியிடம் அக்ரிமெண்ட் போடும் முன் வரை நான் அவரது வீட்டிற்கு சென்றது இல்லை. அவருடைய வீடு எங்கியிரு'க்கிறது என்று தெரியாது. என்னிடம் மணி அவரது நிலம் விற்பது பற்றி யார் சொன்னது என்றால் ஒரு புரோக்கர் சொன்னார். அவரது பெயர் ஞாபகம் இல்லை. இந்த வழக்க தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் வழக்கறிஞர் செல்வராஜை வைத்து நோட்டீஸ் அனுப்பினேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 ஆவணமான கிரைய உடன்பத்திர சொத்து விபரத்தில் வீடு இல்லை. காலி நிலமாக தான் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் செல்வராஜ் சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி நோட்டிஸில் ராஜகவுண்டம்பாளையம் தெரு எண்.7ல் கதவு எண்.30ல் வசிக்கும் குப்பண்ண கவுண்டர் மகன் சின்னுசாமி, அதே ஊரில் கதவு எண். 33ஏவில் வசிக்கும் சின்னுசாமி மகன் செந்தில்குமார் மற்றும்சின்னளகொல்லம்பாளையம் கதவு எண். 4/70ல் வசிக்கும் மணி மகன் கண்ணன் ஆகியோர்களுக்கும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு பதில்

அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

2. இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு அந்த நோட்டீஸ்ஸில் உள்ள விபரங்களை என்னிடம் படித்து காண்பித்தார். மேற்படி இந்த பதில் அறிவிப்பிற்கு நான் தாக்கல் செய்த தாவாவிற்கு பின்னிட்டு கூடுதல் பதில் உரையோ, ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் 1 முதல் 3 வரையுள்ள ராஜவேல்,சின்னுசாமி, செந்தில்குமார் ஆகியோர்கள் திருச்செங்கோடு டவுன் பள்ளிபாளையம் ரோடு பங்களா தெரு, ஏஆர் காம்பளக்ஸ் கதவு எண் 136/6 ல் ஸ்ரீ வாரி பைனான்ஸ் பங்குதாரர்களாக இருந்து பைனான்ஸ் நடத்தி வருவதை குறிப்பிட்டு கேட்டால் அந்த விபரம் எனக்கு தெரியாது.

3. மேற்படி சின்னுசாமி, செந்தில்குமார் எனக்கு பழக்கம் இல்லை. இந்த பதில் அறிவிப்பிற்கு பின்னிட்டு நான் அவர்களிடம் சென்று பதில் அறிவிப்பு பற்றிய விபரத்தை கேட்டேனா என்றால் இல்லை. நான் குடியிருப்பது சொந்த வீடு என்றால் சரிதான். நான் டவுனில் தான் குடியிருக்கிறேனா என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை நான் வாங்குவதற்கான நோக்கம் குடியிருப்பதற்கு தான்.

4. நான் டவுனில் குடியிருந்து டவுனிலேயே தொழில் செய்த நிலையில் எதற்காக டவுனுக்கு வெளியே தூரமான பகுதியில் வீடு வாங்க வேண்டும் என்றால் பின் நாளில் குடியிருப்பதாக வாங்கலாம் என்று வாங்கினேன். நான் ஒப்பந்தம் போட்டுள்ள சொத்தில் எத்தனை கடை மற்றும் வீடு உள்ளது என்றால் அது காலி நிலம் ஆகும். எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் தாவா சொத்து ஒரு வீடும், 3 கடைகளும் இருப்பதாக சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியும். ஆனால் அது காலி நிலமாகும். எனக்கு எனது வழக்கின் வாதுரையில் டமேற்சொன்ன கடை மற்றும் வீடு பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி ஆனவர் அவரது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும் என்கிறார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரம்எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள

பிரமாண வாக்குமூலத்தில் வீடு கடை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- D.Mohankumar

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.<br>Sd/.D.Mohankumar,<br>Subordinate Judge,<br>Tiruchengode. |